**English**

TNC Inc welcomes the involvement of all people from our local community.

**Arabic**

يرحب نادي TNC بمشاركة جميع الأفراد من المجتمع المحلي.

**Chinese Traditional**

TNC有限公司歡迎本地社區所有人士的參與。

**Croatian**

TNC Inc poziva sve ljude u našoj zajednici da se uključe.

**Dari**

کلپ TNC Inc از دخلات همه مردم محل پیشباز می نماید.

**Dinka**

Aguir ë TNC ee kɔɔc cëŋ wuöt akeunhom yiic cɔɔl bïk röt mat kek TNC

**Hindi**

टी एन सी इंक। हमारे स्थानीय समुदाय के सभी लोगों का भाग लेने के लिए स्वागत करता है।

**Persian (Farsi)**

انجمن TNC ازهمکاری و شرکت کلیه افراد محل استقبال می کند.

**Samoan**

E faafeiloa'i atu le TNC Inc ile auai mai o tagata uma mai la tatou komiuniti.

**Tagalog (Filipino)**

Maluwag na tinatanggap ng TNC ang pakikisali ng lahat ng mga tao sa aming lokal na komunidad.

**Tamil**

TNC Inc எமது உள் சமூகத்தவர்களின் ஈடுபாட்டை வரவேற்கிறது.

**Turkish**

TNC Inc, yerel toplumumuzun tüm bireylerinin katılımını arzu etmektedir.



**TNC** காரியாலயம் பிளக்டவுனிலுள்ள 9 13 குசைளவ யுளநரெந வில் அமைந்துள்ளது. இங்குதான் பிளக்டவுன் சோசியல் கிளப் உறுப்பினர்கள் கூடுவதுடன் மாதாந்த நிர்வாகக் குழுவின் கூட்டங்களும் இடம்பெறுகின்றன.

இல. 5 Kelly Close, Mt. Druitt The WASH ஹவுஸில் Mt. Druitt நிகழ்ச்சித்திட்ட அங்கத்தவர்கள் கூடுவர்.

இவ்விடங்கள் காலை 9 முதல் மாலை 4 வரை திங்கள் முதல் வெள்ளி வரை நிர்வாகத்திற்காகத் திறந்திருக்கும். நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளின்போது திறந்திருக்கும் நேரமும் நீடிக்கப்படும். ஆயினும் வருவதற்கு முன்பு தயவு செய்து தொலைபேசியில் உங்கள் தகவலைப் பதிவு செய்யவும்.

## TNC கூட்டிணைக்கப்பட்டது

(TNC Inc ,ற்கு முதுமையடைதல், இயலாமை, மற்றும் வீட்டில் பராமரிப்பு துறையால் நிதியளிக்கப்படுகிறது)

கிளப் இணைப்பாளர் - **(02) 9671 7217**
பொழுதுபோக்கு அதிகாரி - **(02) 9671 7217**
பொழுதுபோக்கு உதவியாளர்- **(02) 9831 1176**


**PO Box 394, Blacktown NSW 2148**

**9-13 First Avenue, Blacktown**
**(off Sunnyholt Rd, walking distance from Blacktown Rail Station)**



22306 www.newleafdesign.com.au


# பொழுதுபோக்கு கேளிக்கை நுகர்வு சேவைகள்

## கற்றல் திறன் இயலாமையுடைய வளர்ந்தோருக்கு

TNC inc Leisure Services


**தொலைபேசி: (02) 9671 7217**

9-13 First Avenue, Blacktown, NSW 2148

தொலைநகல்: (02) 9831 1176 • மின்னஞ்சல்: tnc@iprimus.com.au

**Tuesday Night Club** பிளக்டவுன் **L.G.A**. யில் வசிக்கும் கற்றல் திறன் இயலாமை உடையவர்களுக்கு கேளிக்கைநுகர்வு மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகளை ஊக்குவிக்கும் ஓர் சமூக அமைப்பாகும்.

**TNC Inc.** இரண்டு கேளிக்கைநுகர்வு நிகழ்ச்சிகளை வழங்குகிறது. ஒரு நிகழ்ச்சி பிளக்டவுனில் இடம் பெறுவதுடன் மற்றையது **Mt.Druitt** ,ல் இடம்பெறுகிறது.



Fun day at Luna Park

சமுதாய வசதிக்கூடங்களையும், போக்குவரத்து வசதிகளையும் சாத்தியமான வேளைகளில் பயன்படுத்தி ஒருமைப்பாட்டை ஊக்குவிக்கக்கூடிய செயற்பாடுகளையும் விடுமுறைகளையும் தமது அங்கத்தவர்களுக்கு கிளப் ஏற்பாடு செய்கிறது.

வார இரவுகள் மற்றும் வார இறுதி இரவுகளிலும் நண்பர்களுடன் இரவு உணவு, DVDமற்றும் பிஸ்ஸா நைட்ஸ், BBQ , மற்றும் பகல் நேர சுற்றும் பிரயாணங்கள் உட்பட பல செயற்பாடுகள் வழங்கப்படுகின்றன.

பல்வேறு அவுஸ்திரேலிய மற்றும் வெளிநாட்டு இடங்களுக்கு விடுமுறைகாலச் சுற்றுலாக்கள் வார இறுதிகளில் அல்லது ஒரு வார காலம் என்ற அடிப்படையில் அளிக்கப்படுகின்றன.

சில வேளைகளில், உறுப்பினர்கள் சில குறிப்பிட்ட தலைப்புகளில் ஆர்வம் காட்டுவர். சாத்தியமான சூழ்நிலைகளில் அத்தகைய விடயங்களில் கிளப் சிறு பாடநெறிகளை ஏற்பாடு செய்ய இயலும். உதாரணமாக: பெண்கள் சுகாதார தேவைகள், கம்பியூட்டர், உறவுகள் அல்லது முதலுதவி.

இயலாமைகள் உள்ளோரின் தேவைகளை சமுதாயத்திற்கு அறியச் செய்வதில் கிளப் மும்முறமாக ஈடுபட்டுள்ளது, அத்துடன் உறுப்பினர்களுக்கும் ஆர்வமுடையோருக்கும் தகவல் மூலத்தை அளிக்கவும் பாடுபடுகிறது.




***TNC Inc. 1979 ,ல் உருவாக்கப்பட்டதுடன் 1990,ல் கூட்டிணைக்கப்பட்டது. இது ஒரு நிர்வாகக் குழுவினால் நிர்வகிக்கப்படுவதுடன் இக் குழுவில் பெற்றோர்கள், நண்பர்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள சமூக உறுப்பினர்கள் அல்லது துறை சார் நிபுணர்கள் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.***



New Building

## சேவையைப் பயன்படுத்துவோர் குழு

சேவையைப் பயன்படுத்துவோர் குழு கேளிக்கைநுகர் உறுப்பினர்களின் கருத்துக்களையும் விருப்புகளையும், வழக்கமான திட்டமிடல் மாலை அமர்வுகள் மற்றும் நிர்வாகக் குழுவிற்கான காலாண்டு அறிக்கைகள் மூலம் தெரிவிக்கும்.

உள்ளூர் சமுதாயத்திலுள்ள தாம் விரும்பும் கேளிக்கை நுகர் வசதிக் கூடங்களை சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்காக அவர்களுக்கு உதவுவதை சகல TNC அலுவலர்களும் நோக்கமாகக் கொள்கின்றனர். சேயற்பாடுகளை வெற்றிகரமாக அமுல்செய்ய தொண்டர்கள் தேவைப்படுகின்றனர்.

## செய்திப் பிரசுரம் மற்றும் செயற்பாடுகள்

செயற்பாடுகள் மற்றும் விடுமுறைகளுக்காக உறுப்பினர்களிடமிருந்து ஒரு கட்டணம் அரவிடப்படும். கட்டணங்கள், எதிர்கால செயற்பாடுகள் மற்றும் முக்கிய விடயங்கள் பற்றிய விளக்கங்கள் பிளக்டவுன் உறுப்பினர்களுக்கான மாதாந்த செய்திப்பிரசுரம் ஒன்றின் மூலமும் Mt.Druitt இற்கான காலாண்டு செய்திப் பிரசுரத்தின் மூலமும் வெளியிடப்படும். செய்திப் பிரசுரங்கள் கிளப் உறுப்பினர்களுக்கும் இணைச் சங்கங்களுக்கும் சமுதாய மற்றும் உள்ளூராட்சி சங்கங்களுக்கும் விநியோகிக்கப்படும். ஒரு செயற்பாட்டில் இணைந்துகொள்ள விரும்புவோர் தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக ஒரு ஏற்பாட்டைச் (booking) செய்து கொள்ளலாம்.

## அங்கத்தவராதல்

விண்ணப்பித்ததும் உங்களுக்கு முழு அல்லது இணை அங்கத்துவமா தேவைப்படுகிறது என்பதை தீர்மானிப்பதற்கு ஓர் நேர்முகம் நடாத்தப்படும். அங்கத்துவக் கட்டணம் வருடாந்தம் செலுத்தப்படும்.

முழு அங்கத்துவம் = $20

இணை அங்கத்துவம் = $10